கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுக் கலைமாணித் தேர்வு- **2012/2013**

**(August/September 2015)**

**EDU/S 2213** - நிறுவன நடத்தையும் பயன்தரு பாடசாலையும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

01.

(அ) வினைத்திறன் ( Efficiency), விளைதிறன் (Effectiveness) ஆகிய இரு பதங்களையும் பாடசாலையை ஒரு நிறுவனமாகக் கொண்டு அதன் முகாமைத்துவ நடத்தைகளுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

( 13 புள்ளிகள்)

(ஆ) சிறந்த ஒரு நிறுவனத்தின் முகாமைத்துவமானது நோக்கங்களை உயர்மட்டத்தில் அடைந்து கொள்வதற்குக் கொண்டிருக்க வேண்டிய பண்புகளை உதாரணங்கள் மூலம் விளக்குக.

( 12 புள்ளிகள்)

02.

(அ) ஒரு பாடசாலையை விளைதிறன் மிக்க பாடசாலையாக மாற்றுவதில் முறைமைக் கோட்பாடு ( System Theory) எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பதைப் பகுப்பாய்வு செய்க?

( 12 புள்ளிகள்)

(ஆ) கல்வி முகாமைத்துவ தகவல் தொகுதி (EMIS) என்றால் என்ன? இதனால் ஒரு நிறுவனத்திற்குக் கிடைக்கும் நன்மைகள் பற்றிக் கருத்துரைக்குக.

( 13 புள்ளிகள்)

03.

(அ) பாடசாலை மட்ட முகாமைத்துவத்தில் (SBM) காணப்படும் குறைபாடுகள் எவ்வாறு பாடசாலை அபிவிருத்திக்குத் தடையாக அமையும் என்பதை உதாரணங்கள் மூலம் விளக்குக.

( 13 புள்ளிகள்)

(ஆ) நிறுவனங்கள் உச்ச அளவிலான விளைவுகளை பெற்றுக்கொள்ள F.W. Taylor தனது விஞ்ஞான முகாமைத்துவ கொள்கையின் ஊடாக முன்வைத்த கருத்துக்களைப் பகுப்பாய்வு செய்க.

04.

(அ) ( Henry Fayal) ஹென்றி பயோல் கூறும் 8 வகையான முகாமைத்துவச் செயல்கள் எவ்வாறு ஒரு நிறுவனம் செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதில் பிரதிபலிக்கின்றன என்பதை உதாரணங்கள் முன்வைத்து விளக்குக.

( 13 புள்ளிகள்)

(ஆ) பயன்தரு நிறுவன நடத்தையில் குறிக்கோள் அடிப்படையிலான முகாமைத்துவம் (MBO) பெறும் முக்கியத்துவத்தை நடைமுறை உதாரணங்கள் ஊடாக விளக்குக.

( 12 புள்ளிகள்)

05.

(அ) பின்வரும் நவீன மானிட உறவுக் கோட்பாடுகள் எவ்வாறு முகாமைத்துவ செயல்முறைக்கு உளவியல் பின்னணியில் இருந்து உதவுகின்றன என்பதை விளக்குக.

I. மாஸ்லோவின் தேவைக் கோட்பாடு

(09 புள்ளிகள்)

II. டக்ளஸ் மக்கிறகர் - X. Y கோட்பாடு

(08 புள்ளிகள்)

III. பிரடெரிக் ஹேர்ஸ்பேர்க் - ஊக்குவித்தல் சுகாதாரக் கோட்பாடு

(08 புள்ளிகள்)

06.

(அ) அதிபர் ஒரு பாடசாலையின் முகாமையாளர் என்ற அடிப்படையில் மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதில் கைக்கொள்ளக்கூடிய நுட்பங்களை உதாரணங்கள் மூலம் விளக்குக.

( 12 புள்ளிகள்)

(ஆ) ஒரு நிறுவனத்தில் தொடர்பாடல் ஏன் அவசியமாகின்றது என்பதை விளக்குவதுடன் தீர்மானம் செய்தலில் தொடர்பாடல் செயன்முறையானது எவ்வாறு முக்கியம் பெறுகின்றது என்பதை நடைமுறை உதாரணங்கள் காட்டி விளக்குக.

( 13 புள்ளிகள்)